மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்ட இந்த உணர்வுகளின் அடிப்படையைப் புரிந்துகொண்டு அந்த விடுதியினரே திருந்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்களிடமிருந்தே அப்படிப்பட்ட திருந்திக்கொண்ட ஒரு கடிதம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். இல்லையேல் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருங்களத்தூரைச் சேர்ந்திருக்கக் கூடிய ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிலாளர்கள் 700 பேர்கள் வரையிலே கைதாகியிருக்கக்கூடிய செய்தி வந்திருக்கிறது. ஏற்கனவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கக்கூடிய பிரச்சினை. அவர்களுக்கு ஒரு மாத சம்பள பாக்கியாவது கொடுப்பதற்கு ஒரு சமரச ஆலோசனை வைக்கப்பட்டு அது சம்பந்தப்பட்ட தொழிலாளர் துறை அதிகாரி வருவதற்கு முன்பாக அந்த நிர்வாகிகள் உள்ளே செல்ல முற்பட்டபோது ஏற்பட்ட ஒரு சம்பவம் காரணமாக தள்ளிப்போனது. இப்பொழுதாவது சுமுகச் சூழ்நிலை ஏற்படுவதற்கும அந்த மறியல் போராட்டத்தை நிறுத்துவதற்கும், அந்த சம்பளத்தை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அவசர உணர்வின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நான் நேற்றையதினம் உங்களிடத்திலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். 5 நாட்களாக இதுசம்பந்தமாக ஏற்கனவே முன்னாலே கிளப்பப்பட்டு, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியும் கூட அந்தத் தொழிற்சாலை திறக்கப்படாத காரணத்திற்காக 3,000 தொழிலாளிகள் 6 மாதம், 7 மாதமாக எந்த ஊதியமும் பெறாமல் பட்டினி இருக்கக்கூடிய சூழ்நிலையில் மறியல் நடத்தியிருக்கிறார்கள். தினமும் 500-க்கும் அதிகமானவர்கள் மறியலிலே கைதாகியிருக்கிறார்கள். அந்த மறியல் செய்யக்கூடிய அந்தத் தொழிலாளிகளை அவர்கள் புறப்படுகின்ற இடத்திலிருந்து, ரோடின் வழியாக அவர்கள் ஒரு குறிப்பிட்ட தூரம் கூட சென்று தங்களுடைய குறைகளைச் சொல்லி பிற மக்களிடம் அந்த நியாயத்தைச் சொல்லி உணர வைக்கக்கூடிய அந்தக் காரியத்தைக் கூட செய்யவிடாமல் போலீசார் புறப்படுகின்ற இடத்திலேயே கைது செய்கிறார்கள். நேற்று அந்த தொழிலாளிகளை வாழ்த்தி அந்த மறியலுக்குச் செல்லக், கூடிய நேரத்தில், புறப்படுகின்ற இடத்திலேயே கைது செய்கிறார்கள். அவர்கள் கொஞ்சதூரம் சென்ற பிறகு செய்தால் மக்களுக்கு என்ன போராட்டம், அந்த முதலாளி எவ்வளவு அடம் பிடிக்கிறான் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள முடியும். அந்தத் தொழிலாளிகள் தங்களுடைய உணர்வுகளை பொது

மக்களுக்கு தெரியப்படுத்த முடியாமலேயே தடுத்துவிடுகிறார்கள். அவர்கள் 6 மாதங்களாக பட்டினியாக இருக்கிறார்கள், 3 மாத சம்பளமோ, 1 மாத சம்பளமோ கொடுப்போம் என்று சொன்னதைக் கூட கொடுக்காமல் இருக்கிறார்களே, உடனடியாக எந்தத் தொகையாவது கொடுத்து ஓரளவாவது அவர்களை பட்டினியிலிருந்து பாதுகாத்து நடவடிக்கை எடுப்பதோடு உடனடியாக தொழிற்சாலையைத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் வேலை நிறுத்தம், அந்தத் தொழிற்சாலை மூடியதன் தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தோம். அந்த நிர்வாகம் ஒரு மாதச் சம்பளம் இடைக்காலத்திலே வழங்குவதற்கு ஏற்றுக்கொண்டது. அந்தச் சம்பளத் தொடர்பான ஆவணங்களை எடுப்பதற்காகச் சென்ற அந்த நிர்வாகத்தைச் சேர்ந்த அலுவலர் தாக்கப்பட்டார். அதனாலேதான் இந்த இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று நிர்வாகத் தரப்பிலே சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் தாக்குதல் நடைபெறவில்லை, நிர்வாகம் சொல்வதுபடி நடைபெறவில்லை என்பது தொழிற்சங்கத்தின் சார்பாக எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்தாகும். எனவே, இரு வேறு கருத்துக்கள் இங்கே நிலவிக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் இந்தத் தடை இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, தொழிற்சங்கத் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்களேயானால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் இரு சாராரையும் அழைத்துப் பேசுவதற்கு இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. பிரச்சினையைத் தீர்த்து வைப்பதிலேயும் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடம். திரு இரா. மோகன் பேசட்டும்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நேற்றைய தினம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம்....... (ஒரு புத்தகத்தைக் காட்டினார்).....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. மோகன் அவர்கள் உட்காரலாம். என்னிடத்திலே இசைவு கேட்கப் பெறாத எந்த ஆவணத்தையும் இங்கே படிக்கக்கூடாது. (குறுக்கீடு) அடுத்து, திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் (குறுக்கீடு).